மாதவரம் - சோழிங்கநல்லூர், மாதவரம் - கோயம்பேடு:

# 2-வது கட்ட மெட்ரோ ரெயில் திட்ட கட்டுமான பணிகள் விரைவில் தொடங்கும்



மாதவரம் - சோழிங்கநல்லூர், மாதவரம் - கோயம்பேடு இடையிலான 2-வது கட்ட மெட்ரோ ரெயில் திட்ட கட்டுமான பணிகள் விரைவில் தொடங்க இருப்பதாக சட்டசபையில் தெரிவிக்கப்பட்டது.

தமிழக பட்ஜெட்டில் கூறப்பட்டுள்ளதாவது:-

## மெட்ரோ ரெயில் திட்டம்

முழுமையாக செயல்படும் மெட்ரோ ரெயில் போக்குவரத்து அமைப்பை சென்னை நகரம் பெற்றுள்ளது. நவீன பொது போக்குவரத்து முறையின் பயன்களை மக்கள் பெறுவதற்கு, போக்குவரத்து வலையமைப்பை மேலும் விரிவுபடுத்துதல் அவசியமாகும். எனவே, சென்னை மெட்ரோ ரெயில் திட்டத்தின் 2-ம் கட்டத்தின் கீழ், 118.90 கிலோமீட்டர் நீளமுள்ள 3 மெட்ரோ ரெயில் வழித்தடங்கள் அமைப்பதற்கான கட்டுமான பணிகளை விரைவில் முடிப்பதற்கு அரசு முக்கியத்துவம் அளிக்கிறது.

மாதவரம் முதல் சோழிங்கநல்லூர் வரை மற்றும் மாதவரம் முதல் சென்னை புறநகர் பேருந்து நிலையம் வரையிலான 52.01 கிலோமீட்டர் நீளமுள்ள வழித்தடங்களுக்கு நிதியுதவி வழங்க ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை ஒப்புதல் அளித்துள்ளது. விரிவான திட்ட வடிவமைப்புகள் தயாராக உள்ள நிலையில், இத்திட்டத்துக்கான கட்டுமான பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளன.

## ரூ.3,100 கோடி ஒதுக்கீடு

ஆசிய வளர்ச்சி வங்கி, ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி மற்றும் புதிய வளர்ச்சி வங்கி ஆகிய பன்னாட்டு நிதி நிறுவனங்களிடம் இருந்து, 2-ம் கட்டத்தின் எஞ்சியுள்ள, சென்னை புறநகர் பேருந்து நிலையத்தில் இருந்து சோழிங்கநல்லூர் வரையிலும், சோழிங்கநல்லூர் முதல் சிறுசேரி சிப்காட் வரையிலும் மற்றும் சென்னை கலங்கரை விளக்கத்தில் இருந்து பூந்தமல்லி புறவழிச் சாலை வரையிலுமான வழித்தட பகுதிகளுக்கு, நிதி திரட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

சென்னை மெட்ரோ ரெயில் திட்டத்தின் முதல் கட்ட திட்டத்துக்கு, 50 சதவீத பங்கு மூலதனத்தினை மத்திய அரசு வழங்கியது போன்று, இந்த 2-ம் கட்ட திட்டத்துக்கும் 50 சதவீத பங்கு மூலதனம் வழங்க மத்திய அரசிடம் கோரப்பட்டுள்ளது. பட்ஜெட்டில் சென்னை மெட்ரோ ரெயில் திட்டத்துக்கு பங்கு மூலதன உதவி, சார்நிலை கடன் மற்றும் வெளிநாட்டு கடனை விடுவிப்பதற்காக மொத்தம் ரூ.3,100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.